


# பூத்தாயே!

ஔவையார்

சித்திரம் : முரளி நாகப்புழா

தமிழிலிருந்து மொழி

கீதா தர்மராஜன்

கதாவின் 300எம் திங்க்புக்



என் அன்பு பூமித்தாயே!



பச்சை வயலோ
அல்லது காடோ



உயரமான மலையோ
அல்லது பள்ளத்தாக்கோ



நீ எங்களை அக்கறையாகப்
பார்த்துக்கொள்கிறாய்.



நாங்கள் உன்னை அக்கறையாகப்
பார்த்துக்கொண்டால்!



பூமித்தாயே
நீண்ட காலம் நீ நலமாக வாழ்வாயாக!

# TADAA!

## 1 யோசியுங்கள்

ஒரு புகழ்பெற்ற எழுத்தாளர் ஒருமுறை கூறினார், "எல்லோரும் படிக்கும் புத்தகங்களையே நீங்களும் படித்தால், எல்லோரும் யோசிப்பது போலவே நீங்களும் யோசிப்பீர்கள்," என்று கூறினார். அவர் சொன்னது சரிதானா?

## 2 கேளுங்கள்

அவ்வையார் எழுதிய 25 கவிதைகளிலிருந்து நீங்கள் புதிதாக, வித்தியாசமாக ஏதாவது கற்றுக்கொண்டீர்களா? ஔவையாரின் எண்ணங்கள் ஏன் மகத்தானவையாகக் கருதப்படுகின்றன? அவற்றில் உங்களுக்கு எது மிகவும் பிடித்தது?

## 3 கலந்துரையாடுங்கள்

நம்முடைய அன்பான பூமியை மகிழ்ச்சியடையச் செய்ய உங்களால் ஒரு காரியம் செய்ய முடியுமென்றால், அது என்னவாக இருக்கும்?

## 4 செயல்படுங்கள்

மரங்கள் பூமித்தாயின் குழந்தைகள். அவள் தன்னுடைய பசுமை குழந்தைகள் மூலம் நம்மை அக்கறையாக கவனித்துக்கொள்கிறாள். நீங்கள் ஒரு மரத்தை அக்கறையாகப் பார்த்துக்கொள்வீர்களா? பூமித்தாயிடம் "அம்மா, உனக்கு என் மனமார்ந்த நன்றி!" என்று அன்போடு கூறுவீர்களா?

## 5 சாதித்துக் காட்டுங்கள்

இது அவ்வையாரின் மற்றொரு கவிதை

*நமது பூமியில் ஒரேயொரு குழந்தை பரிவோடு இருந்தால்*
*போதும் அவளால் அனைவருக்கும் மழை கிடைக்கும்.*

எல்லொருக்கும் மழை கிடைக்கச் செய்யும் அந்தக் கருணைமிக்க பரிவான குழந்தையாக நீங்கள் இருக்க முடியுமா?

நம்மால் உண்மையாகவே மற்றவர்களிடம் பரிவோடு இருக்க முடியுமா? மற்றவர்களிடம் கருணையோடு நடந்து கொள்ள முடியுமா? கண்டிப்பாக முடியும்.

அதற்கான எளிய
வழிகளை
அறிய அடுத்த
பக்கத்திற்குச்
செல்லுங்கள்!

# 9 வழிகளில் நாம் மற்றவர்களிடம் பரிவோடு நடந்துகொள்ளலாம்

மற்றவர்களுக்கு உதவி செய்யலாம்

நாமும் அவர்களோடு சேர்ந்து செய்யலாம்.

மற்றவர்களின் நலனில் மகிழ்ச்சியடையலாம்

மற்றவர்களிடம் இனிமையாக, நல்ல விஷயங்களைப் பேசலாம்

நம் நண்பர்களை ஊக்கப்படுத்தலாம்

மற்றவர்கள் நலனில் அக்கறை காட்டலாம்

மற்றவர்களிடம் நல்லவிதமாக, மரியாதையோடு நடந்துகொள்ளலாம்

மற்றவர்கள் பேசும்போது அதை கவனமாகக் கேட்கலாம்

புன்னகை செய்யலாம்

வேலைகளைப் பகிர்ந்து கொள்ளலாம்.




# படியுங்கள்!
# புரிந்துகொள்ளுங்கள்!
# கலந்துரையாடுங்கள்!

## பலப்பல ஆண்டுகளுக்கு முன்பு....

- சுமார் 2500 ஆண்டுகளுக்கு முன்பு தென்னிந்தியா முழுமையும் தமிழகம் என்று அழைக்கப்பட்டது.
- தமிழகத்தை தலைசிறந்த மன்னர்கள் ஆண்டுவந்தார்கள். அந்த மன்னர்கள்
- இசை, நாட்டியம், கவிதை, நுண்கலைகள் போன்றவற்றை மிகவும் விரும்பினார்கள்.
- அவர்கள் பல கவிஞர்களைத் தங்கள் அரசவைக்கு வரவழைத்து தங்கள் பாடல்களையும் கவிதைகளையும் பகிர்ந்துகொள்ளச் செய்தார்கள்.

## 400 கவிஞர்கள் பாடியபோது....

- மூன்று தமிழ்ச் சங்கங்கள் இருந்ததாக வரலாற்றாசிரியர்கள் குறிப்பிடுகிறார்கள்.
- தமிழ்ச் சங்கங்கள் கவிஞர்கள் ஒன்றுகூடித் தங்கள் கவிதைகளை வாசிக்கும் சிறந்த கவி சம்மேளனங்களாகவும் செயல்பட்டன.
- சங்க காலத்தில் ஏறத்தாழ 400 கவிஞர்கள் தமிழ்க்கவிதைகளை எழுதினார்கள்.
- பல கவிஞர்களை மன்னர்கள் அரசவைக்கு வரவழைத்து ஆலோசனைகள் கேட்பது வழக்கமாக இருந்தது.



## சங்க காலத்தில் ஔவையார் என்று ஒரு கவிஞர் இருந்தார்.

- அவர் அறிவில் சிறந்தவர். அன்பான பாட்டி.
- அவர் சிறந்த கவிஞர்.
- தன்னிடம் உதவி நாடி வரும் பல மன்னர்களுக்கும் சாதாரண மக்களுக்கும் நல்ல ஆலோசனைகள் வழங்குவார்.
- சிலர் ஔவையார் 2300 ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்தவர் என்று கூறுகிறார்கள்.
- தென்னிந்தியா முழுவதிலும் உள்ள கிராமங்களுக்கு, வெறுங் கால்களோடு ஔவையார் நடந்துசென்றதாகப் பல கதைகளில் கூறப்பட்டுள்ளது.
- குடியானவர்கள், அவர்கள் குடும்பத்தினரோடு ஔவையார் தங்கியிருந்தார்.
- எல்லோரையும் மகிழ்விக்கும்படியான பாடல்களை எழுதினார் அவர்.

## கடவுள் எங்கே?

ஒரு சமயம் ஔவையார் ஒரு பழைய கோயிலில் ஓய்வெடுத்துக்கொண்டிருந்தார். படுத்திருந்த அவருடைய கால்கள் சிவபெருமானின் விக்கிரகத்தை நோக்கி நீண்டிருந்தன. இதனால் பார்வதி தேவிக்குக் கோபம் ஏற்பட்டது. "இப்படி மரியாதையில்லாமல் படுத்திருக்கிறாயே?" என்று ஔவையாரைத் திட்டினார் பார்வதி தேவி. ஔவையார் சற்று நேரம் அமைதியாக இருந்தார். பின், "என்னை மன்னித்துவிடுங்கள் அம்மா. ஆனால், கடவுள் எங்கே இல்லை என்பதை மட்டும் எனக்கு தயவுசெய்து சொல்லுங்கள். நான் அந்தப்பக்கமாக காலை நீட்டிக்கொள்கிறேன். அதைக் கேட்டு பார்வதி தேவி கோபம் நீங்கிப் புன்னகை செய்தாள். "நீ சொல்வது சரிதான். கடவுள் இல்லாத இடமேயில்லை! அவர் எங்கு நிறைந்தவர்!"

Source: National Geographic, JSTOR Wikipedia

**கீதா தர்மராஜன் :** தமிழ்நாட்டில் உள்ள தஞ்சாவூர் மாவட்டத்தைச் சேர்ந்தவர். குழந்தைகளுக்காகக் கதைகள் எழுதுபவர்; நூல்கள் வெளியிடுபவர். 1988இல் கதா அமைப்பைத் தோற்றுவித்தார். இலக்கியம், கல்வி ஆகிய துறைகளில் இவர் ஆற்றிய சீரிய பணிகளுக்காக பத்மஸ்ரீ விருது பெற்றவர். இன்னும் பல விருதுகள் பெற்றிருக்கிறார்.

**முரளி நாகப்புழா** கேரளாவில் உள்ள நாகப்புழா என்ற ஊரில் பிறந்து வளர்ந்தவர். குழந்தையாய் இருக்கும்போது வீட்டைச் சுற்றிப் பச்சைப்பசேலென்றிருப்பதைப் பார்க்க அவருக்கு மிகவும் பிடிக்கும். அதனால்தான் அவருடைய ஓவியங்களில் நிறையவே பசுமை இருக்கும்!

ஆங்கிலத்திலிருந்து தமிழாக்கம் செய்தது: லதா ராமக்கிருஷ்ணன்

KATHA

கதா பதிவு செய்யப்பட்ட, லாபநோக்கமற்ற அமைப்பு. 1988இல் துவங்கப்பட்டது. எழுத்தறிவிலிருந்து இலக்கியத்திற்குத் தொடரும் இயக்கத்தை சாத்தியமாக்குவதே எங்கள் நோக்கம்.

''இந்திய மணிமகுடத்திலிருக்கும் அருங்கல்வி முத்து கதா''

— Naoyuki Shinohara, Deputy Managing Director, IMF

நகரங்களில் நிலவும் சாதாரண, அசாதாரண துயரங்களைக் கையாளவும் சமாளிக்கவும் மேற்கொள்ளப்படும் படைப்பூக்க முன்முயற்சிகள் எல்லாவற்றுக்கும் மிகச் சிறந்த முன்மாதிரியாகத் திகழ்கிறது கதா.

— Charles Landry, *The Art of City Making*

கதாவுக்கு குழந்தைகள் என்றால் கொள்ளைப் பிரியம். அந்த அன்பும் அக்கறையுமே இத்தனை அற்புதச் சித்திரக்கதை நூல்களை கதா உருவாக்கக் காரணம்.

— Time Out

கதா நூல்களில் வரும் குழந்தைகள் செய்வதைப்போல் குழந்தைகளால் தங்கள் சமூகங்களில் நிலையான நிஜமான மாற்றத்தை செய்ய முடியும் என்ற சிந்தனையே கதாவினுடைய பணியை முன்னெடுத்துச் செல்கிறது.

— Papertigers

*இந்தக் கவிதையின் ஆங்கில மொழியாக்கம் குழந்தைகளுக்காக கீதா தர்மராஜன் செய்தது.*

இந்த நூலின் முதல் பதிப்பு 2021இல் வெளியாகியது.
காப்புரிமை © கதா, 2020, 2021
மொழிபெயர்ப்புக் காப்புரிமை © கீதா தர்மராஜன்
சித்திரங்களுக்கான காப்புரிமை © முரளி நாகப்புழா
விலாசம்: A3, சர்வோதயா என்க்ளேவ்,
ஸ்ரீ அரபிந்தோ மார்க்
புது தில்லி - 110 017.
தொலைபேசி : 91-11 4141 6600 . 4141 6610
மின்னஞ்சல்: editors@katha.org,
இணையதளம்: www.katha.org

**எங்கள் குறிக்கோள்:** ஒவ்வொரு குழந்தையும் மகிழ்ச்சிக்கும், அர்த்தத்திற்கும் நன்றாக படிக்க வேண்டும்.

கதா பதிவு செய்யப்பட்ட, லாபநோக்கமற்ற அமைப்பு. 1988இல் துவங்கப்பட்டது. எழுத்தறிவு முதல் இலக்கியம் வரையிலான திட்டங்களை செயல்படுத்துகிறோம். வாசிப்பினால் கிடைக்கும் ஆனந்தத்தை குழந்தைகளும் பெரியவர்களும் உணரச்செய்வதே எங்கள் நோக்கம். நாங்கள் ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட ஏழைக் குழந்தைகளுடன் பணியாற்றி அவர்களை தர நிலை வாசிப்புக்கு கொண்டு வந்துள்ளோம்.

இந்த நூலின் அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டவை. பதிப்பாளரின் எழுத்துபூர்வ முன் அனுமதி இன்றி இந்த நூலின் எந்தவொரு பகுதியும் எந்த வடிவத்திலும் மீள்பிரசுரம் செய்யப்படலாகாது; பயன்படுத்தப்படலாகாது.

எங்கள் நூல்களின் விற்பனை மூலம் கிடைக்கும் நிகர லாபத்தில் 10% சமூகத்தின் அடித்தட்டிலுள்ள குழந்தைகளின் வாசிப்புக்கும், அவர்களுக்கான வாழ்நாள் முழுவதுமான கற்றல்சார் திட்டங்களுக்காகவும் பயன்படுத்தப்படுகிறது.



## இண்டிகோ தொடரில் இடம்பெறும் மற்ற ஐ எல் ஆர் புத்தகங்கள்

மகிழ்ச்சிக்கும் அர்த்தத்திற்கும் படியுங்கள்







































**FOR OUR BOOKS**

www.books.katha.org

கதைகளின் வழியே
இந்தியாவின்
பல்கலாச்சார
அடையாளம்

— The Pioneer

for children
a katha book
ISBN 978-93-88284-81-3
www.katha.org
₹ xxx